தினகரன் 20 NOV 2024

# கருத்துகேட்பு ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ. 20: திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி தெரிவித்ததாவது:

குஜிலியம்பாறை வட்டம், ஆலம்பாடி கிராமத்தில் கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் சுரங்கம் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்தினை கேட்டறிய கலெக்டர் தலைமையில் நவ.22ம் தேதி காலை 11 மணியளவில் குஜிலியம்பாறை வட்டம், ஆலம்பாடி ஊராட்சி சமுதாய கூடத்தில் நடைபெற இருந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தினமணி 20 NOV 2024

# கிரானைட் சுரங்கம்: கருத்துக் கேட்புக் கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ. 19: கிரானைட் சுரங்கம் அமைப்பது தொடர்பாக குஜிலியம்பாறை அருகே நடைபெற இருந்த கருத்துக் கேட்புக் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை அடுத்த ஆலம்பாடி கிராமத்தில் கிரனைட் சுரங்கம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது குறித்து பொதுமக்களின் கருத்துகளை கேட்டறிய வருகிற 22-ஆம் தேதி கூட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆலம்பாடி சமுதாயக் கூடத்தில் நடைபெற இருந்த இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்படுகிறது என்றார் அவர்.

தினத்தந்தி 20 NOV 2024

குஜிலியம்பாறை அருகே

# கிரானைட் குவாரி கருத்துக்கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், நவ.20-

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை தாலுகா ஆலம்பாடியில் கிரானைட் குவாரி அமைக்கப்பட உள்ளது. இதையொட்டி பொதுமக்களின் கருத்துகளை கேட்பதற்கு, ஆலம்பாடி சமுதாயக்கூடத்தில் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெற இருந்தது. இந்தநிலையில் நிர்வாக காரணங்களால் அந்த கருத்துக்கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு இருப்பதாக, கலெக்டர் பூங்கொடி தெரிவித்துள்ளார்.

தினசூரியன்    20 NOV 2024

# கிரானைட் சுரங்கம் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்: கலெக்டர் தகவல்

திண்டுக்கல், நவ.20

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை வட்டம், ஆலம்பாடி கிராமம், தி/ள்.எஸ். [illegible].கிரானைட்ஸ் பல வண்ண கிரானைட் சுரங்கம் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்தினை கேட்டறிய மாவட்ட கலெக்டர் தலைமையில் 22.11.2024 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் தி/ள். ஆலம்பாடி ஊராட்சி சமுதாயக்கூடம், ஆலம்பாடி கிராமம், குஜிலியம்பாறை வட்டம், திண்டுக்கல் மாவட்டம் என்ற இடத்தில் நடைபெற இருந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது, என மாவட்ட கலெக்டர் பூங்கொடி தெரிவித்துள்ளார்.